## கழக இளைஞர் அணிச் செயலாளர் பொறுப்புதான் என் நெஞ்சுக்கு நெருக்கமானது!

# 2026 சட்டமன்றத் தேர்தலே நம் இலக்கு!

## தி.மு.க. இளைஞர் அணி 45-ஆம் ஆண்டு தொடக்க விழாவில் சமூக வலைத்தளப் பக்கத்தையும் தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!




**சென்னை, ஜூலை 22–**

**சென்னை, தேனாம்பேட்டை, இளைஞர் அணி தலைமையகமான அன்பகத்தில், நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் தி.மு.க இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு தி.மு.க இளைஞர் அணியின் 45–ஆம் ஆண்டு விழா, கழக இளைஞர் அணிக்கு மாவட்ட வாரியாக, சமூக வலைத்தளப் பக்கங்கள் தொடக்க விழா, இளைஞர் அணி நிர்வாகிகளுக்குச் சமூக வலைத்தளப் பயிற்சி தொடக்கம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.**

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

### 45-ஆம் ஆண்டு விழா!

“இன்றோடு நம் இளைஞர் அணியினர் 44 ஆண்டுகளை முடித்து, 45-வது ஆண்டில் வெற்றிகரமாக அடியெடுத்து வைக்கிறோம். அதற்கு, இந்த நேரத்தில் என் அன்பையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

45- ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம் என்றால், இந்தப் பொறுப்பில் இப்போது நாம் இருக்கிறோம் என்றால், அது நமக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமை. அந்த வாய்ப்பை எனக்கு மட்டும் அல்ல, உங்களுக்கும் சேர்த்து அந்த வாய்ப்பை அளித்த கழக தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசும்போது சொன்னார்கள், நான் இளைஞர் அணிச் செயலாளராக பொறுப்பேற்ற பிறகு, அனைத்துத் தேர்தல்களிலும் நம் கழகம் வெற்றிப் பெற்றிருக்கிறது. அதற்கு எனக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் அமைப்பாளர்களுக்கும், துணை அமைப்பாளார்களுக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இந்தியாவில் ஒரே இயக்கம்!

இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து இயக்கங்களுக்கும் முன்னோடியாக மற்றவர்கள் தொடங்குவதற்கு முன்பே, இளைஞர் அணியைத் தொடங்கி வைத்தவர் நம் கழகத் தலைவர். இந்தியாவிலேயே ஓர் இயக்கத்திற்கு இளைஞர் அணி இருக்கிறது என்றால், அது நம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத் தான்.

கழகத்தில் பல அணிகள் இருந்தாலும், அதில் முதல் அணி, நம் இளைஞர் அணி என்பதை, நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். அதை நாம் நிரூபித்தும் காட்டி இருக்கிறோம்.

சேலத்தில், நம் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டைக் கடந்த ஜனவரி மாதம் நடத்தி மிகப்பெரிய வெற்றிமாநாடாக நடத்திக் காட்டிய உங்கள் அனைவருக்கும் நான் ஏற்கெனவே நன்றி சொல்லி இருந்தாலும், மீண்டும் இந்த 45-ஆவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிற இந்த நேரத்தில் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சென்று, மக்களைச் சந்தித்து, நம் இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்று தேர்தல் பிரச்சாரத்தில், நான் மட்டும் இல்லை, நீங்களும் ஈடுபட்டீர்கள்.

### எத்தனை முறை தமிழ்நாட்டுக்கு வந்தாலும் மோடியை ஏற்க மாட்டார்கள்!

தமிழ்நாட்டு மக்கள் மனத்தை மாற்ற, மோடி அவர்கள் ஆறு முறை, ஏழு முறையென தமிழ்நாட்டிற்கு வந்திருந்தார். எந்த முறையும் இல்லாத அளவிற்கு எப்படியாவது இரண்டு அல்லது மூன்று சீட்டுகளாவது வெற்றிபெற்று விடுவோம் என்ற நம்பிக்கையில் வந்தார்.

நான் அப்போதே சொன்னேன், `நீங்கள் ஆறு முறை இல்லை, ஆயிரம் முறை வந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் உங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எங்கள் தலைவரையும் சமூக நீதியையும்தான் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொன்னேன். அதை நிரூபித்துக் காட்டி, 40-க்கு 40 வெற்றியைக் கொடுத்த தமிழ்நாட்டு மக்களுக்கு, நம் இளைஞர் அணியின் சார்பாக, நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் மாநிலத் துணைச் செயலாளர் பிரகாஷ் அவர்களுக்கு இந்த முறை, ஈரோட்டில் போட்டியிடுகிற வாய்ப்புக் கிடைத்து, கிட்டத்தட்ட 2 லட்சத்து 35 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். நம் மாநில துணைச் செயலாளர் பிரகாஷ் அவர்களுக்கும் இந்த இளைஞர் அணிக் கூட்டம் தங்களின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

டெல்லிக்குச் சென்றதால், இளைஞர் அணிப் பணிகளை மறந்து விட மாட்டீர்கள் என்று நான் நம்புகின்றேன். இப்போது, என்னிடம் வந்து அனுமதி கேட்டார். “நான் நாளைக்கு டெல்லிக்குக் கிளம்புகிறேன். வருவதற்கு 20 நாள் ஆகும்” என்றார். டெல்லிக்குச் சென்றாலும், இளைஞர் அணிப் பணிகளில், நீங்கள் கவனம் செலுத்துவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

சி.என்.அண்ணாதுரை அவர்களும் மீண்டும் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். அவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தேர்தல் வெற்றி!

இந்த நேரத்தில் இன்னொரு நன்றியும் சொல்லி ஆக வேண்டும். விக்கிரவாண்டி தேர்தல் வெற்றி. அதற்கும் நாம் அத்தனை பேரும் களத்தில் இறங்கி, நம் பிரச்சாரங்களை எல்லாம் மேற்கொண்டோம். இரண்டு நாட்கள் விக்கிரவாண்டிலேயே சுற்றிச் சுற்றி எனது தேர்தல் பணிகளை மேற்கொண்டேன். என்னை விட அதிகமாக இங்கு வந்திருக்கக் கூடிய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் எல்லாம் கிட்டத்தட்ட 15 நாட்கள், 20 நாட்கள் விக்கிரவாண்டியிலேயே தங்கி, தேர்தல் பணியாற்றி இருக்கிறீர்கள்.

### இளைஞர் அணி ஆய்வு

ஆய்வுக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவர்களின் மினிட் புத்தகங்களை எல்லாம் ஆய்வுசெய்து என்னென்ன பணிகள் செய்திருக்கிறார்கள், இன்னும் எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றலாம் என்று சொல்லியிருந்தீர்கள். அப்படி ஆய்வுக் கூட்டங்களை நடத்துகிற போது 99 சதவிகிதம் பேர், ஏன் நீங்கள் அத்தனை பேருமே விக்கிரவாண்டி தேர்தலில் தேர்தல் பணியாற்றி இருக்கிறீர்கள் என்பதை அறிந்தேன். அதைக் கேட்கும்போது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. எனவே அந்தத் தேர்தல் வெற்றியிலும் உங்களின் பங்கு மிக மிக முக்கியமானது. அதற்கும் இந்த நேரத்தில், என்னுடைய நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு 45-வது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறோம். நம் கழகத் தலைவர் அவர்கள் கோட்டையில் இருக்கிறார்கள். அங்கிருந்தாலும், அவருடைய முழு நினைவுகளும் முழு எண்ணங்களும் இந்த அன்பகத்தில் நடக்கின்ற இந்த நிகழ்ச்சியின் மீதுதான் கண்டிப்பாக இருக்கும். ஏனென்றால், என்னை நேற்று நள்ளிரவில் தொலைபேசியில் அழைத்து, நாளைக்கு 45-வது பிறந்த நாள் இளைஞர் அணிக்கு என்று சொல்லி வாழ்த்தினார்கள். அதேபோல் இன்று காலை 8 மணிக்கு எல்லாம் தொலைபேசியில் அழைத்து, இளைஞர் அணிக்குத் தன்னுடைய வாழ்த்துகளைச் சொன்னார்கள்.

### ‘பிராண்ட் அம்பாசிடர்’!

தலைவர் எந்தப் பொறுப்புக்குப் போனாலும், எந்த மிகப்பெரிய பொறுப்பை அடைந்தாலும் மாநாட்டில் நான் சொன்னதைபோல், எங்கள் இளைஞர் அணிக்கு `பிராண்ட் அம்பாசிடர்’ என்றால், அது நம் கழகத் தலைவர் அவர்கள்தான். அதைத்தான் அவரும் விரும்புவார். ஏனென்றால், அவர் உழைத்திருக்கிறார். இன்றைக்கு இவ்வளவு பெரிய பொறுப்புக்கு வந்திருக்கிறார் என்றால், இளைஞர் அணிதான் அதற்கு அடித்தளமிட்டது.

இங்கு நிறையபேர் உள்ளாட்சிப் பொறுப்புகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறீர்கள். அதேபோல உங்களில் ஒருவராக இருந்த பலர் மாவட்டச் செயலாளராக இன்று வந்திருக்கிறார்கள். ஒன்றியச் செயலாளராகப் பலர் வந்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, முதலமைச்சராக வந்திருக்கிறார்கள் என்றால், அதற்கு இந்த இளைஞர் அணியில் போட்ட உழைப்புதான் அடித்தளம்.

### சமூக வலைத்தளப் பக்கங்கள்!

இன்றைக்குச் சமூக வலைத்தளப் பக்கங்கள் தொடங்கி இருக்கிறோம். ஏற்கெனவே, இளைஞர் அணிக்கு என்று ஒரு சமூக வலைத்தளம் இருந்தாலும், இன்றைக்கு ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்குமென தனியாக ஒரு சமூக வலைத்தளப் பக்கம், இன்ஸ்டாகிராம், எக்ஸ் தளம், ஃபேஸ்புக் ஆகியவற்றைத் தொடங்கி இருக்கிறோம். அடுத்த ஒன்றரை மாதங்களுக்கு இந்தச் சமூக வலைத்தளப் பக்கங்கள் அன்பகத்தில் இருந்தே இயங்கும். இதற்கான பயிற்சிகள் முறையாக வழங்கப் பட்ட பிறகு, அவற்றில் தகவல்களைப் பகிரும் வசதி உங்கள் அனைவருக்கும் பிரித்து வழங்கப்படும்.

நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், எப்படி அரசியல் களத்தில் மக்களைச் சந்திக்கிறோமோ, அந்தக் களம் எவ்வளவு முக்கியமோ அதேபோல இன்றைக்கு இந்தச் சமூக வலைத்தளங்களும் மிக மிக முக்கியமாக இருக்கின்றன. குறிப்பாக, பாரதிய ஜனதா கட்சி வெறும் பொய்களையே பரப்பி, பொய்களை மட்டுமே பேசி, அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய இயக்கத்திற்குத்தான் வரலாறும் சாதனைகளும் இருக்கின்றன. அவற்றை நாம் சமூக ஊடகப் பக்கங்கள் வழியாக மக்களிடம் பரவலாகக் கொண்டு சேர்க்க வேண்டும்.

### பாசறைக் கூட்டங்கள்!

அடுத்தபடியாக, தலைவரின் கட்டளையின் பேரில், தொகுதிக்கு ஒரு பாசறைக் கூட்டம் என 234 தொகுதிகளிலும் பாசறைக் கூட்டங்களை நடத்திக் காட்டினோம். இப்போது ஒன்றிய-நகர அளவிலும் பாசறைக் கூட்டங்களை நடத்த இருக்கிறோம்.

இன்றைய காலகட்டத்தில் இந்தச் சமூக வலைத்தளங்கள் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்வது, இந்தப் பயிற்சியை இன்னும் நன்றாகக் கூர்ந்து கவனித்து அனைவரும் சமூக வலைதளங்களில் இன்னும் சிறப்பாக நீங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காலையில் எழுந்தவுடன், தினமும் ‘முரசொலி’யைத் தவறாமல் படித்துவிடுங்கள். தலைவரின் அறிக்கைகள், நம் அரசின் திட்டங்கள், என் அறிக்கைகள் எல்லாம் படித்துவிட்டு, முரசொலியின் கடைசிப் பக்கத்தைப் படியுங்கள். கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாக தினமும் இளைஞர் அணிக்கு என்று ஒரு பக்கத்தை ஒதுக்கி, முரசொலி பாசறைப் பக்கத்தை வெளியிட்டு வருகிறோம். அது மட்டுமல்ல, இளைஞர் அணிக்கு என்று முதன்முறையாக ஒரு பதிப்பகத்தைத் தொடங்கி, புத்தகங்களை வெளியிட்டு இருக்கிறோம். அவை அனைத்துப் புத்தகக் கண்காட்சிகளிலும் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் படித்து சோசியல் மீடியாவில் நீங்கள் இன்னும் ‘ஆக்டிவ்’ ஆக இயங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### 234 நூலகங்கள்!

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, இளைஞர் அணிக்குத் தலைவர் அவர்கள் ‘ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு நூலகம் தொடங்க வேண்டும்’ என்று கட்டளையிட்டிருந்தார். அதேபோல் இன்றைக்கு 234 தொகுதிகளில் 50 தொகுதிகளில் 50 நூலகங்களை இளைஞர் அணி சார்பாகத் திறந்திருக்கிறோம். அந்த 50 மாவட்ட அமைப்பாளர்களுக்கும் துணை அமைப்பாளர்களுக்கும் என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீதம் இருக்கிற அந்த சட்டமன்றத் தொகுதிகளில் நிறைய இடத்தில் தயாராக இருக்கிறது. நான் சுற்றுப்பயணம் செல்லும்போது அதைத் திறப்பதற்காக அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் வரும்போது கண்டிப்பாக அனைத்து நூலகங்களும் விரைவில் தொடங்கி வைக்கப்படும்.

தமிழ்நாடு முழுவதும் பேச்சுப் போட்டி நடத்தி, 100 பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து, தலைமை இடத்தில் கொடுக்க வேண்டும் என்று தலைவர் கட்டளையிட்டிருந்தார்கள். அந்தப் பணியை இப்போது ஆரம்பித்து இருக்கிறோம்.

### விண்ணப்பங்கள் பரிசீலனை!

ஆய்வுக் கூட்டத்தின்போது அதைப் பற்றி நான் விசாரித்தேன். உங்கள் அனைவருக்கும் அந்த விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு, உங்கள் பகுதியில் உங்கள் மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கல்லூரிகளுக்கும் கொடுக்கப்பட்டு வருகிற 25- ஆம் தேதிக்கு முன்பு அந்தப் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து, உங்கள் மாவட்ட அளவில் பேச்சுப் போட்டிகளை நடத்தி விரைவில் 30 நடுவர்கள் தேர்ந்தெடுக்க இருக்கிறோம்.

அவர்களை எல்லாம் தேர்ந்தெடுத்து, உங்களின் மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்து அந்தப் பேச்சு போட்டிகளையும் மிகச் சிறப்பாக நடத்தி, சென்னையில் ஒரு பிரமாண்டமான மிக எழுச்சியான முறையில், ஒரு பேச்சுப் போட்டியை நடத்தி தமிழ்நாட்டிலேயே சிறந்த 100 பேச்சாளர்களைத் தேர்ந்தெடுக்கிற பணியைத் தொடர்ந்து செய்வோம்.

### இல்லந்தோறும் இளைஞர் அணி!

‘இல்லந்தோறும் இளைஞர் அணி’, பல மாவட்டங்களில் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில மாவட்டங்களில் இன்னும் தொடங்கவில்லை. ஏனென்றால், தொடர்ந்து தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த இல்லந்தோறும் இளைஞர் அணி மிக மிக முக்கியமான பணி.

வீட்டிற்கே சென்று இளைஞர்களைச் சந்தித்து, அவர்களிடம் இளைஞர் அணியில் நீங்கள் ஏன் சேர வேண்டும், இளைஞர் அணியில் என்னென்ன பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம் தி.மு.க அரசின் திட்டங்கள், சாதனைகள் எல்லாம் சொல்லி சேர்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பணிகளையும் விரைவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மாநில துணைச் செயலாளர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### துணைச் செயலாளர்கள்!

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பாகவும், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை சார்பாகவும் பல பணிகள் இருந்ததாலும், தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து, ஆய்வுக்கூட்டங்களில் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணலில், என்னால் ஈடுபட முடியவில்லை. என்றாலும், துணைச் செயலாளர்கள்தான் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து, உங்கள் ஒவ்வொருவரின் மாவட்டத்திற்கும் வந்து, உங்கள் ஒவ்வொருவரிடமும் நேர்காணல் செய்து, அதற்கான ரிப்போர்ட்களை என்னிடம் அளித்தனர். அதை வைத்துத் தான் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே, அவர்களுக்கு இந்த நேரத்தில், நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விரைவில் ஒன்றிய, பேரூர், பகுதி அளவில் நியமிக்கப்பட வேண்டிய நிர்வாகிகளெல்லாம் அறிவிக்கப்படுவார்கள். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

### துணையாக இருப்போம்!

இங்கு பேசிய பலரும், `முதலமைச்சருக்குத் துணையாக நான் வரவேண்டும், இருக்க வேண்டும்’ என்றெல்லாம், பேசினார்கள். தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். பத்திரிகைகள் வருகின்ற (பலத்த கைதட்டல்), நான் இன்னும் பேசி முடிக்கவில்லை, பொறுங்கள்... பத்திரிகையில் வரும் கிசுகிசுக்கள் இவற்றையெல்லாம் படித்துவிட்டு வந்து, `இது நடக்கப் போகிறதோ’ என்று, ‘அப்போ இப்போதே நாம் ஒரு கோல் போட்டு வெச்சுருவோம், ஒரு துண்டு போட்டு வெச்சிடுவோம்’, என்ற அடிப்படையில் இங்கு நீங்கள் பேசினீர்கள்.

### நெஞ்சுக்கு நெருக்கமான பொறுப்பு!

எப்படி தலைவர் எந்தப் பொறுப்புக்குச் சென்றாலும், இளைஞர் அணிச் செயலாளர் என்கிற பொறுப்புதான் அவர் நெஞ்சுக்கு மனதுக்கு மிகவும் நெருங்கிய பொறுப்பு என்று சொல்கிறாரோ, அதைப்போலத்தான் எனக்கும் இளைஞர் அணிச் செயலாளர் என்னும் பொறுப்புதான். ‘துணை முதலமைச்சர்’ என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, நான் சொன்னேன், `எல்லா அமைச்சர்களுமே முதலமைச்சருக்குத் துணை அமைச்சர்கள்தான்’. இங்கு வந்திருக்கக்கூடிய அத்தனை அமைப்பாளர்களுமே நம்முடைய முதலமைச்சருக்குத் துணையாகத்தான் இருப்போம் என்று நான் சொன்னேன்.

எவ்வளவு பெரிய பொறுப்புக்கு வந்தாலும், என்னுடைய மனதுக்கு மிக மிக நெருங்கிய பொறுப்பு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞர் அணிச் செயலாளர் என்கிற பொறுப்புதான். எனவே, எந்தப் பொறுப்பு வந்தாலும் இளைஞர் அணியை நான் மறந்து விட மாட்டேன்.

### காத்திருக்கும் பணிகள் ஏராளம்!

நமக்கு முன்பாக காத்திருக்கக்கூடிய பணிகள் ஏராளம். எப்படி நாடாளுமன்றத் தேர்தலின் வெற்றிக்காக உழைத்தோமோ, விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலுக்காக உழைத்தோமோ, அதைப் போல வருகின்ற 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு, மிக மிக முக்கியமான தேர்தலுக்கு, உழைக்க வேண்டும். நம்முடைய கழகத் தலைவருடைய சாதனைகள், திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். குறிப்பாக, பெண்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

இந்த முறை தேர்தல் முடிவுகள் வந்த பிறகு, ஓர் ஆய்வு செய்து பார்த்தோம். எந்த முறையும் இல்லாத அளவுக்கு, எந்தத் தேர்தலிலும் இல்லாத அளவுக்கு இந்த முறை பெண்கள் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, வாக்களித்து இருக்கிறார்கள். அந்த அளவுக்கு நம்முடைய தலைவருடைய திட்டங்கள் `கட்டணமில்லா இலவசப் பேருந்து திட்டம்’, `கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ என இந்த இரண்டு திட்டங்களும் பெண்களிடையே மிகப் பெரிய அளவில் சென்று சேர்ந்திருக்கின்றன. தலைவருக்கு மிகப்பெரிய நற்பெயரைத் தேடித் தந்துள்ளன. நம் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பு வந்திருக்கிறது.

### திட்டங்கள் – சாதனைகள்!

இதே போல `புதுமைப்பெண் திட்டம்’. அரசு மேல் நிலைப் பள்ளிக்கூடங்களில் படித்து வரும் பெண்களுக்கு, எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், கல்லூரியில் மேற்படிப்பு படிக்கச் செல்லும்போது மாதம் ஆயிரம் ரூபாய் என்னும் திட்டம் வாயிலாக அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் என்கிற திட்டம் பேருதவியாக இருக்கிறது. கிட்டத்தட்ட இந்தத் திட்டத்தின் வாயிலாக, இரண்டரை லட்சம் மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர். இதனால், மாணவிகள் கல்லூரியில் சேரும் சதவிகிதமே பெரிய அளவில் உயர்ந்திருக்கிறது.

மாணவிகளுக்கு மட்டும் இருந்த இந்தத் திட்டத்தை, மாணவர்களுக்கும் இந்த ஆகஸ்ட் மாதம் முதல் `தமிழ்ப்புதல்வன்’ திட்டத்தின் வாயிலாக, விரிவுபடுத்த இருக்கிறார்கள். நம் கழக அரசின் திட்டங்கள் இவற்றையெல்லாம் இளைஞர் அணி தம்பிமார்கள் உள்வாங்கி, மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

### 2026- ஆம் ஆண்டு தேர்தல்!

2026- ஆம் ஆண்டு என்ன நடந்தாலும் சரி... எத்தனைக் கூட்டணிகள் வந்தாலும் சரி... ஜெயிக்கப் போவது கழகத் தலைவர் அவர்கள்தான். மீண்டும் தமிழ்நாட்டை ஆளப்போவது நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்தான். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான், அது மட்டுமே நம் இளைஞர் அணி தம்பிமார்களின் இலக்காக இருக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு, 45-வது ஆண்டில் நம்முடைய இளைஞர் அணி அடியெடுத்து வைக்கிறது என்றால், இது ஒன்றுதான் நம்முடைய ஒரே குறிக்கோள், தி.மு. கழகக் கூட்டணிதான் ஜெயிக்கப் போகிறது.

முதலமைச்சராக நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்தான் அமரப் போகிறார். இதைவிட, நமக்கு வேறு எந்த நோக்கமும் இருக்கக் கூடாது என்று கூறிக்கொண்டு, வந்திருக்கும் அத்தனை பேருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, தொடர்ந்து நடைபெறும் பயிற்சியில் கலந்துகொண்டு, இப்போது அளிக்கப் போகும் பயிற்சியில் கலந்துகொண்டு, பயிற்சி வகுப்பில் கூறப்படும் விஷயங்களைக் கூர்ந்து கவனித்து, சோசியல் மீடியாவில் பதிவிட்டு, இன்னும் கொஞ்சம் ஆக்டிவாக இருக்க வேண்டும். தினமும் காலையில் ஒரு பத்து நிமிடம் மாலையில் ஒரு பத்து நிமிடம் ஒதுக்கினீர்கள் என்றால், அதுவே போதுமானது என்று கூறிக்கொண்டு, மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் எழுச்சி உரை ஆற்றினார். இந்த விழாவில், இளைஞர் அணியின் மாநில துணைச்செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா (எ) ரகு, இளையராஜா, ப.அப்துல் மாலிக், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார், மக்களவை உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.எல்.ஈஸ்வரப்பன், ஜெ.ஜெ.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, எல்.சம்பத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**2026 ஆம் ஆண்டு என்ன நடந்தாலும் சரி... எத்தனைக் கூட்டணிகள் வந்தாலும் சரி... ஜெயிக்கப் போவது கழகத் தலைவர் அவர்கள்தான். மீண்டும் தமிழ்நாட்டை ஆளப்போவது நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்தான். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான், அது மட்டுமே நம் இளைஞர் அணி தம்பிமார்களின் இலக்காக இருக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு, 45–வது ஆண்டில் நம்முடைய இளைஞர் அணி அடியெடுத்து வைக்கிறது என்றால், இது ஒன்று தான் நம்முடைய ஒரே குறிக்கோள், தி.மு.கழகக் கூட்டணிதான் ஜெயிக்கப் போகிறது.**